# "நாமக்கல் மாவட்ட இலவச சட்ட ஆணையம்"
# மற்றும்
# "அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியற் கல்லூரி"
# இணைந்து நடத்திய
# "ராகிங் பற்றிய விழிப்புணர்வு" நிகழ்ச்சி

எருமப்பட்டி, அன்னை மாதம்மாள் ஷீலா பொறியியற் கல்லூரியில் 28/09/2016 புதன்கிழமையன்று ராகிங் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைப்பெற்றது. இந்த நிகழ்ச்சியில் **கல்லூரியின் தாளாளர் திரு. M. மணி** அவர்கள் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக **நாமக்கல் மாவட்ட முதன்மை நீதிபதி, திருமதி, ராமதிலகம்** அவர்கள் மற்றும் **நாமக்கல் மாவட்ட சார்பு நீதிபதி திரு. பாரி** அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். மேலும் **கல்லூரி முதல்வர் திரு. T பரிதிமாற் கலைஞன்** அவர்கள் வரவேற்புரையாற்றினார். நாமக்கல் மாவட்ட வழக்கறிஞர் அமுதவள்ளி வாழ்த்துரையாற்றினார்.

## <u>கல்லூரித் தாளாளர் திரு. எம். மணி அவர்கள் பேசியதாவது</u>

இந்த நாள் மிக இனிய நாள், ஏனென்றால் இந்த ராகிங் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு மாவட்ட முதன்மை நீதிபதி, மற்றும் சார்பு நீதிபதியும் எத்தனையோ பணிகளுக்கிடையே இங்கு வந்திருப்பது உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கவேண்டுமென்ற நோக்கத்தில் தான். இவர்களது அன்றாடப் பணி என்ன என்பதை நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும் . ஓய்வு என்பதே இல்லாமல் பணியாற்றி எத்தனையோ வழக்குகளை ஆய்வு செய்து தீர்ப்பு வழங்குவது என்பது சாதாரணமானது அல்ல. சட்டத்திற்கு உட்பட்டு எந்த குற்றத்திற்கு என்ன தண்டனை வழங்கவேண்டுமென்று அலசி ஆராயவேண்டும்.

வள்ளுவர் 2000 வருடங்களுக்கு முன்னரே சொன்னதுபோல

"செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க

செய்யாமை யானும் கெடும்."

செய்யக்கூடாததை செய்வதும், செய்ய வேண்டியதை செய்யாமல் இருப்பதும், தவறானது தான். சட்டத்தில் செய்யக்கூடாததை செய்வதும், செய்யவேண்டியதை செய்யாமல் இருப்பதும் குற்றமாகும். முன்பெல்லாம் மாணவர்களுக்கு குறிப்பாக கல்லூரிகளில் அளவுகடந்த தொந்தரவாக இந்த ராகிங் மரணம் வரை சென்ற காரணத்தால் தான் இந்த ராகிங் தடை சட்டம் 1997 கொண்டு வரப்பட்டது. இது பற்றி தெளிவாக எடுத்துரைக்கவே நம் நீதிபதிகள் வந்திருக்கிறார்கள்.

குற்றம் செய்துவிட்டு சட்டம் எனக்கு தெரியாது என்று சட்டத்திலிருந்து தப்பிக்க முடியாது. அதற்கும் ஒரு சட்டம் உள்ளது சட்டம் எனக்கு தெரியாது என்று சொல்லக்கூடாது என. எனவே மாணவர்களாகிய நீங்கள் இன்று சட்டங்களை பற்றி தெளிவாக அறிந்து எதுவெல்லாம் குற்றம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

சாதாரணமாக, இதுபோன்ற உயர் பதவிகளில் இருப்பவர்களை நேரில் சந்திப்பது என்பது கடினம் எனவே இந்த நிகழ்ச்சியை உங்கள் வாழ்வில் மிக முக்கிய நிகழ்ச்சியாக கருதவேண்டும். இதை நீங்கள் அறிந்து கொண்டு உங்கள் நண்பர்களுக்கும் இதை எடுத்துரைக்க வேண்டும் என்று உரையாற்றினார்.

## சார்பு நீதிபதி திரு. பாரி அவர்கள் பேசியதாவது

சென்னை உயர்நீதி மன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் இன்றைய தினம் இந்த ராகிங் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடக்கிறது. மாணவனாக இருந்தாலும், மாணவிகளாக இருந்தாலும் ஒருவருக்கு ஒருவர் நட்புணர்வுடன் பழகுவது தவறல்ல. ஆனால் அது எதுவரை என்ற எல்லையை அறிந்து கொள்ள வேண்டும். ஒரு மாணவன் மாணவியையோ, ஒரு மாணவி மாணவனையோ தவறான நோக்கத்தில் பேசினாலோ, பார்த்தாலோ, எழுத்துக்களால் வெளிக்காட்டினாலோ, நடை உடை பாவனை செய்கைகளில் தீங்கு விளைவித்தால் அது ராகிங் தான். இளம் வயதில் எவரொருவர் குற்றம் செய்தால் அதற்கான தண்டனை குறைவாக இருக்கும். அதுவே 16 வயதை கடந்துவிட்டால் தண்டனை மிக கடுமையாக இருக்கும். 16 வயது குறைவாக இருந்தால் இளம் சிறார் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்படும். சட்டத்தை பொருத்தவரை மாணவர்களாக இருந்தாலும் சட்டம் அதற்கான கடமையை செய்யும். ராகிங் செய்தால் மாணவர்களுக்கு நிச்சயம் தண்டனை கிடைத்தே தீரும். இன்றைய மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் நீங்கள் குற்றம் செய்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அது குற்றமென்று நிரூபணமானால் தண்டனை கிடைத்தே தீரும் அப்போது உங்கள் எதிர்காலம் பூஜ்ஜியம் ஆகிவிடும். மாணவர்களாகிய உங்களுக்கு சட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு இருக்கவேண்டும். வாகனங்கள் ஓட்டும் போது ஓட்டுநர் உரிமம் அவசியம். அதேசமயம், வாகனத்திற்கும் காப்பீடு அவசியம் அப்போது தான் எதேனும் இழப்பீடு ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்யமுடியும். இன்றைய மாணவர்களுக்கு சொல்ல வேண்டிய முக்கியமான ஒன்று என்னவென்றால் , காதல் பற்றி தான் இந்த பருவத்தில் வரும் இந்த உணர்வு உண்மையானது அல்ல ஏதோ ஒரு மோகம் மட்டுமே. எனவே மாணவர்களாகிய நீங்கள் உங்கள் எதிர்காலம் சிறக்க வேண்டுமானால் உங்கள் கல்வியில் மட்டுமே கவனத்தை செலுத்தி உங்கள் பெற்றோர்களின் கனவை நனவாக்க வேண்டும் என்று உரையாற்றினார்.

## நாமக்கல் மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி. ராமதிலகம் அவர்கள் பேசியதாவது

இன்றைய நாளில் இந்த ராகிங் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துரைப்பது உங்களுக்காக மட்டுமல்ல நீங்கள் தான் நாளைய இந்தியாவின் எதிர்காலம், இந்தியாவின் சிற்பிகள் என்பதற்காக தான். உங்கள் மூலம் இந்த கருத்துக்களை வழங்குவதன் நோக்கம் உங்களை சுற்றியிருக்கும் அனைவருக்கும் இது சென்றடைய வேண்டும் என்று தான். நம் பெற்றோர் நம் மீது நிறைய நம்பிக்கை வைத்துள்ளார்கள். இந்த சமுதாயத்தில் நாம் உயரிய அந்தஸ்தில் வரவேண்டும் என்று நல்ல கல்லூரியை தேர்வு செய்து நம்மை படிக்க வைக்கிறார்கள். அவர்களுடைய உழைப்பினால் வரும் வருமானத்தை உங்களுக்காகவே உங்கள் கல்விக்காகவே அளிக்கிறார்கள். உங்கள் வாழ்க்கை சிறக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தான். எனவே, மாணவர்கள் இத்தருணத்தில் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் ராகிங் பற்றிய சட்டங்களை அறிந்து கொள்ளவேண்டும். அடுத்தவர்களை குற்றம் செய்ய தூண்டுவதும் குற்றம் தான். நம் சிகை,உடை அலங்காரம் அடுத்தவர்களை தீண்டும் விதமாக இருக்க கூடாது. நாகரீகமாக நம் சிகை, உடை அலங்காரம் இருக்கவேண்டும். ராகிங் கொலை வரை தூண்டும் என்பதில் உதாரணமாக நாவரசு கொலை வழக்குதான். அதற்கு பிறகு சட்டம் மிக கடுமையாக்கப்பட்டது.

முன்பொரு காலத்தில் கல்லூரி மாணவர்கள் நட்புறவை ஏற்படுத்தி கொள்ள ராகிங் பாலமாக இருந்தது. ஆனால் அது தற்போது கொடுமையாக மாறிவிட்டது. எத்தனையோ குழந்தைகள் படிக்க வசதியில்லாமல் தவிக்கிறார்கள். அவர்கள் சிறந்த மதிப்பெண்கள்பெற்றும் போதிய அடிப்படை வசதி கூட இல்லாமல் இருக்கிறார்கள். இதையெல்லாம் நாம் கருத்தில்கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் சமுதாயத்தை தெரிந்துகொள்ள வேண்டியது கைப்பேசியின் பயன்பாடுதான். அதை தவறான வழிகளிலே பயன்படுத்தாமல் நல்ல நோக்கத்திற்காகவும் பயனுள்ள தகவல்களுக்காகவும் அறிவை வளர்த்துக்கொள்ளவுமே பயன்படுத்த வேண்டும். நமக்கு கிடைக்கப்பட்ட வசதிகளை முறையாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அது தவறும் பட்சத்தில் நம் எதிர்காலம் பாதிக்கும் நம் பெற்றோர்கள் கனவும் பாதிக்கும். எனவே மாணவர்களாகிய நீங்கள் பெற்றோர்களின், ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் பேரில் உங்கள் வாழ்க்கையை, எதிர்காலத்தை சிறப்பாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

விழாவின் இறுதியாக கல்லூரி துணை முதல்வர் திரு. A. நடராஜன் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.